# கிளிநொச்சி கல்வி வலயம் - 2019

**தொழில்நுட்பவியல் பாதுகாப்பு தொடர்பான பரீட்சை** **க.பொ.த உயர்தரம்**

சுட்டெண்:-..................................... நேரம்:- **1.30** மணித்தியாலங்கள்

## பகுதி – I

சரியான விடையின் கீழ் கோடிடுக.

**01)** தொழில்நுட்பவியல் சார்ந்த பாதுகாப்பு என்றால் என்ன?

a) தன்னிச்சையாக செயற்படல் b) பாதுகாப்பு முன்னேற்பாட்டுடன் கருமமாற்றல்

c) பாதுகாப்பு இன்றி கடமையாற்றல் d) தொழில்நுட்ப அறிவின்றி கருமமாற்றல்

**02)** தொழிற்கழகம் ஒன்றில் சீரான ஒழுங்கமைப்பை பேணுவதற்கு தேவையான காரணியாக அமைவது?

a) சுத்தமின்மை b) மன ஒருமைப்பாட்டின்மை

c) சிறப்பான தொழிற்கள ஒழுக்கம் d) இடப்பற்றாக்குறை

**03)** சிறப்பான தொழிற்கள ஒழுக்கமாக அமையாதது?

a) தொழிற்கழகத்தினுள் மதுபாவனையில் ஈடுபடல் b) தொழிலாளரது சுத்தம் பேணல்

d) மானிடவள முகாமைத்துவம் காணப்படல் c) போதியளவு இடவசதி

**04)** தொழில் இளைஞரின் சீரியத்தன்மை எனப்படுவது யாது?

a) தலைக்கவசம் அணியாமை b) முறையான பாதுகாப்பு உருப்படிகளை அணிந்து கடமையாற்றல்

c) காவற் கண்ணாடி இன்மை d) தொழில்நுட்ப அறிவின்றி செயற்படல்

**05)** சாயாப் பலகையை பயன்படுத்துவதன் நன்மையாக அமையாதது?

a) விபத்துக்கள் குறைக்கப்படும் b) சுய பாதுகாப்பு கிடைக்கும்

c) பாதுகாப்பு பேணப்படும் d) கருவிகள், உபகரணங்கள் தொலைந்து போதல்

**06)** தொழிற்கழகம் அல்லது நிறுவனமொன்றில் 5S எண்ணக்கருவை நடைமுறைப்படுத்துவதன் முக்கியத்துவம் யாது?

a) வேலையின் போது போதியளவு இடவசதி

b) இலகுவாக வேலை புரியலாம்

c) தொழில் இளைஞர்கள் வேலையைவிட்டு நீங்கமாட்டார்கள்

d) உபகரணங்கள் தாராளமாக கிடைக்கும்

**07)** இரசாயன பதார்த்தங்கள், வர்ணம் தீட்டுதல், உலோகங்களை காய்ச்சி இணைத்தல் போன்ற செயற்பாடுகளின் போது மிக அவசியமான பாதுகாப்பு செயற்பாடாக அமைவது யாது?

a) கவர்ச்சியான வேலைத்தளம் b) கருவிகள், உபகரணங்கள் சுத்தம்

c) மானிட வளமுகாமைத்துவம் d) போதியளவு ஒளி, காற்றோட்டம் நிலவுதல்

**08)** தொழிற்கழகமொன்றில் பின்பற்ற வேண்டிய விதிமுறைகளில் ஒன்றாக அமைவது?

a) ஆபத்து சமிக்கைகளை விளக்குதல் b) பாதுகாப்பு முறைகளை பின்பற்றாமை

c) விமர்சனம் செய்தல் d) சுத்தமின்மை

**09)** சமிக்கைக்குரிய இயல்புகளில் ஒன்றாக அமையாதது?

a) தெளிவு b) இனங்காண இலகுவானதன்மை

c) கவனத்தை ஈர்க்கத்தக்க தன்மை d) தொழிற்கழக இரைச்சல்

**10)** தீயின் வகைகளுள் அமோனியா, குளோரின், மெதேன் போன்றவற்றில் ஏற்படும் தீ எவ்வாறு அழைக்கப்படும்?

a) சாதாரண தீ
b) வாயுக்களில் ஏற்படும் தீ
c) மின்னில் ஏற்படும் தீ
d) உலோகத்தில் ஏற்படும் தீ

**11)** முதன்மை தீயணைப்பு உபகரணங்களுள் ஒன்றாக அமைவது யாது?

a) தாரைப் பீச்சுமுனை
b) நுரை தீயணைப்பான்
c) சிவிறல் பீச்சுமுனை
d) தாரை மற்றும் சிவிறல் பீச்சுமுனை

**12)** தீயணைப்பான்களை நிறுவும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்களுள் முக்கியமானது?

a) உயரமான இடமாக இருத்தல்
b) உபகரணத்தை அண்மிக்கும் வழியில் தடைகள் காணப்படல்
c) உபகரணத்தை இலகுவாக தாங்கியிலிருந்து கலற்றி எடுக்க முடியாமல் இருத்தல்
d) அனைவராலும் இலகுவாக அவதானிக்க கூடியதாக இருத்தல்

**13)** நீல நிற தீயணைப்பு உபகரணம் பயன்படுத்தப்படும் சந்தர்ப்பம் யாது?

a) காபனீரொட்சைட் தீயணைப்பு உபகரணம்
b) நுரைத் தீயணைப்பு உபகரணம்
c) நீர்த் தீயணைப்பு உபகரணம்
d) உலர் இரசாயன தீயணைப்பு உபகரணம்

**14)** கறுப்பு நிற தீயணைப்பு உபகரணம் பயன்படுத்தப்படும் சந்தர்ப்பம் யாது?

a) உலர் இரசாயன பதார்த்த தீயணைப்பு உபகரணம்
b) நுரைத் தீயணைப்பு
c) காபனீரொட்சைட் தீயணைப்பு உபகரணம்
d) நீர்த் தீயணைப்பு உபகரணம்

**15)** இளமஞ்சள் நிற தீயணைப்பு உபகரணம் பயன்படுத்தப்படும் சந்தர்ப்பம் யாது?

a) நீர்த் தீயணைப்பு உபகரணம்
b) காபனீரொட்சைட் தீயணைப்பு உபகரணம்
c) உலர் இரசாயன பதார்த்த தீயணைப்பு உபகரணம்
d) நுரைத் தீயணைப்பு

**16)** சிவப்பு நிற தீயணைப்பு உபகரணம் பயன்படுத்தப்படும் சந்தர்ப்பம் யாது?

a) நுரைத் தீயணைப்பு
b) காபனீரொட்சைட் தீயணைப்பு உபகரணம்
c) உலர் இரசாயன பதார்த்த தீயணைப்பு உபகரணம்
d) நீர்த் தீயணைப்பு உபகரணம்

**17)** கடதாசி, காட்போட், மரம், விறகு, புடவை, சேதன திண்மக் பதார்த்தங்களில் ஏற்படும் தீயினை அணைப்பதற்கு பயன்படுத்தப்படும் தீயணை உபகரணத்தன் நிறம் யாது?

a) நீலம் b) கறுப்பு c) இளமஞ்சள் d) சிவப்பு

**18)** பெற்றோல், டீசல், உராய்வு நீக்கி எண்ணெய், மசகிடுகளி போன்ற இரசாயனங்களின் ஏற்படும் தீயினை அணைப்பதற்கு பயன்படுதுதப்படும் தீயினை உபகரணத்தின் நிறம் யாது?

a) இளமஞ்சள் b) சிவப்பு c) நீலம் d) கறுப்பு

**19)** மின்வடங்களில் பிழையான தொடுத்தல் அல்லது அதிகளவில் வெப்பமடைவதால் ஏற்படும் தீயினை அணைப்பதற்கு பயன்படுத்தப்படும் தீயணை உபகரணத்தின் நிறம் யாது?

a) கறுப்பு b) நீலம் c) சிவப்பு d) இளமஞ்சள்

**20)** முதலுதவியின் நோக்கங்களாக அமையாதது யாது?

a) பயத்தை ஏற்படுத்துதல்
b) நோயாளியின் உயிரை காப்பாற்றுதல்
c) ஏற்படத்தக்க பாதிப்புக்களை குறைத்தல்
d) நோய் நிலைமை தீவிரமாவதை தவிர்த்தல்

(20x1= 20 புள்ளிகள்)

## பகுதி - II

எவையேனும் 04 வினாக்களுக்கு விடை தருக

01) தொழில்நுட்பவியல் செயற்பாடுகளில் பாதுகாப்பு முன்னேற்பாடுகள் இன்றியமையாத ஒள்றாகும்.

a) சிறப்பான தொழிற்களமொன்றில் சீரான ஒழுங்கமைப்பை பேணுவதற்கு தேவையான காரணிகள் எவை?
b) தொழில்வினைஞர் ஒருவரின் சிறப்பான ஒழுக்கத் தன்மையை வெளிப்படுத்தும் பண்புகள் 05 தருக?
c) உபகரணங்கள் மற்றும் கருவிகளை பயன்படுத்தும் போது சாயாப்பலகையை பயன்படுத்துவதன் அனுகூலங்கள் யாவை?
d) சிறப்பான தொழிற்கள ஒழுக்கங்களை கடைப்பிடிப்பதால் ஏற்படும் நன்மைகள் இரண்டினை விளக்குக.

(20 புள்ளிகள்)

02) தொழிற்களமொன்றில் உரிய விதிமுறைகளை பின்பற்றியே செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்.

a) பாதுகாப்பு சமிக்ஞைகள் என்றால் என்ன?
b) சமிக்ஞைகளுக்குரிய இயல்புகள் 05 இனை குறிப்பிட்டு மூன்றினை விளக்குக.
c) சமிக்ஞைப் பலகைகளை காட்சிப்படுத்துவதனால் ஏற்படக் கூடிய நன்மைகள் எவை?
d) சமிக்ஞைப் பலகைகளை காட்சிப்படுத்தாமையினால் ஏற்படக்கூடிய விபத்துக்கள் இரண்டினை குறிப்பிட்டு விளக்குக.

(20 புள்ளிகள்)

03) தீயணைப்பான்களை நிறுவும் போது நிலவும் அவதானத்துடன் பாதுகாப்புடனும் செயற்படல் வேண்டும்.

a) தீயின் வகுப்புக்கள்?
b) தீயணைத்தல் போது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள்?
c) தீயணைப்பு உபகரணங்களின் வகைகள் குறிப்பிட்டு விளக்குக?
d) தீயணைப்பான்களை நிறுவும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் எவை?

(20 புள்ளிகள்)

04) தொழில்நுட்ப செயற்பாடுகளின் போது முற்பாதுகாப்பு உருப்படிகளை அணிதல் அவசியமானதாகும்

a) முற்பாதுகாப்பு உருப்படிகள் எவை?
b) முற்பாதுகாப்பு உருப்படிகளை அணியாமையினால் தொழில்வினையர் ஒருவருக்கு ஏற்படக்கூடிய விபத்துக்கள் எவை?
c) இவ்வகையாக விபத்துக்கள் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்கள் 3 இனை குறிப்பிட்டு விளக்குக?
d) முற்பாதுகாப்பு உருப்படிகளை அணிவதால் கிடைக்கக்கூடிய நன்மைகளை கூறுக?

(20 புள்ளிகள்)

05) விபத்துக்களின் போது முதலுதவி அளிப்பதனால் ஓரளவு ஆபத்தினை தவிர்த்துக்கொள்ளலாம்.

a) முதலுதவி என்றால் என்ன?
b) முதலுதவி அளிப்பவரிடத்தே காணப்பட வேண்டிய பண்புகள் எவை?
c) முதலுதவிப்பெட்டியொன்றில் இருக்க வேண்டிய பொருட்கள் எவை?
d) மின்தாக்கம் ஏற்பட்ட ஒருவருக்கு அளிக்கப்படும் முதலுதவியினை சுருக்கமாக விளக்குக?

(20 புள்ளிகள்)